O.S. No. 97/2016 **நாள்**: 18.02.2026

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 18 ம் நாள் **அருண் PW-3** என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி. ராமலட்சுமி, உதவியாளர் நிலை 3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **அருண்** | தொழில் | | |
| தந்தை பெயர் | : | குமார் | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | 40 |
| தாலூக்கா | : | | சாதி | : | |

---

**வாதி தரப்பு முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கில் அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது மண்டல துணை வட்டாட்சியராக உதகமண்டலத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் மாவட்ட வருவாய் அலுவலரின் சார்பாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மாவட்ட வருவாய் அலுவலர் சார்பாக நான் சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தை தாக்கல் செய்கிறேன். (**அந்த 17.02.2026 தேதியிட்ட அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. M.J. சுப்பன் என்பவர் உல்லத்தி கிராமம் R.S. No. 270/6-ல் செய்யப்பட்ட உட்பிரிவினை ரத்து செய்து 13.02.2017 தேதியில் வருவாய் கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவிற்கு எதிராக மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்திருந்தார். மேற்படி மேல்முறையீடானது

27.01.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. அதற்கான உத்தரவு தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 ஆவணமாகும்.

**குறுக்கு விசாரணை**

3. மாவட்ட வருவாய் அலுவலரின் 27.01.2025 தேதிய உத்தரவை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் நீதிமன்றத்தை அணுகி தீர்வு பெற்றுக்கொள்ள உத்தரவிடப்பட்டு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.02.18 12:32:59 +0530